www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 6

தேர்வு எண் | | | | | | |

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2023

## தமிழ்

நேரம் : 1.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 30

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 7X1=7

1. இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது -------

(அ) இடம் + மெல்லாம் (ஆ) இடம் + எல்லாம்

(இ) இட + எல்லாம் ஈ) இட + மெல்லாம்

2. காடு + ஆறு என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ------

(அ) காட்டாறு (ஆ) காடாறு (இ) காட்டுஆறு (ஈ) காடுஆறு

3. தவறான சொல்லை வட்டமிடுக.

(அ) கண்டான் (ஆ) வென்ரான் (இ) நண்டு (ஈ) வண்டு

4. மாணவர் பிறர் -------- நடக்கக் கூடாது.

(அ) போற்றும்படி (ஆ) தூற்றும்படி (இ) பார்க்கும்படி ஈ) வியக்கும்படி

5. பிறரிடம் நான் -------- பேசுவேன்.

(அ) கடுஞ்சொல் (ஆ) இன்சொல் (இ) வன்சொல் (ஈ) கொடுஞ்சொல்

6. பழையன கழிதலும் -------- புகுதலும்.

(அ) புதியன (ஆ) புதுமை (இ) புதிய (ஈ) புதுமையான

7. உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல் --------

(அ) மறைந்த (ஆ) நிறைந்த (இ) குறைந்த (ஈ) தோன்றிய

**II. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 6x1=6

8. சொற்களைச் சேர்த்துப் புதிய சொல் உருவாக்குக.

பல் + உண்டு = ----------

9. முறை மாறியுள்ள சொற்களைச் சரியான இடத்தில் பொருத்திச் சொற்றொடரை நிறைவு செய்க.

"ஆக்குவோம் இல்லாமை கல்லாமையை"

10. கலைச்சொல் எழுதுக.

Library -----------



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

11. பிழை திருத்தி எழுதுக.

தெண்றல்

12. "கல்விக்கண் திறந்த காமராசர்" இத்தொடரிலுள்ள எழுத்துகளை மட்டும் பயன்படுத்தி புதிய சொல்லை எழுதுக.

1. -----------

13. இன எழுத்துகள் அமைந்துள்ள சொற்களை வட்டமிடுங்கள்.

தக்காளி, தந்தம், காக்கை, கங்கை

III. கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

14. காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை? 3x2=6

15. கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?

16. உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்றி செலுத்துகின்றனர்?

17. நாம் யாருடன் நட்பு கொள்ள வேண்டும்?

18. இன எழுத்துகள் என்றால் என்ன?

19. கல்வி கற்றல் சார்ந்து உங்கள் பொறுப்புகள் இரண்டனை எழுதுக?

IV. அடிபிறழாமல் எழுதுக. 1x3=3

20. 'மன்னனும் மாசறக்' எனத் தொடங்கும் மூதுரை பாடலை எழுதுக.

V. ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடை எழுதுக. 1x3=3

21. காமராசரின் கல்விப்பணிகள் குறித்து எழுதுக.

22. ஆசாரக் கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?

VI. விடையளி: 1x5=5

23. அ) முன்னுரை – இளமைக் காலம் – கல்விப் பணி – நிறைவேற்றிய பிற திட்டங்கள் – முடிவுரை – மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'காமராசர்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றி எழுதுக.



www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com